# பணிநிறைவு வாழ்த்து!

திருமிகு **T. துரைபாண்டியன்,**
கண்காணிபாளர்

கொஞ்சும் தமிழழகாய், குவலயத்தின் பேரெழிலாய்,
மஞ்சமாய் புனைந்ததன் பாக்களுக்குப் பண்ணெழுதி;
விஞ்சுமோர் இசையுடன் பரவசமாய் யாவரையும்,
நெஞ்சாரப் பாடிமகிழ்விப்பார்; கண்டதோர் பணிநிறைவு!

எங்கள் சுங்கத்தின் எழில் கூட்டும் மொழியாக,
தங்கத் தமிழாலே பா புனையும் பாவலன் தான்,
திங்கள் தோறும் இசைத்த காலம் இனிவருமோ!
சுங்கக் குரலோன் சீராளன் துரைப் பாண்டியனார்;

பணிநிறைவு அடைந்ததனால், பாட்டிசைக்க யாருளரோ?
மணியொலித்தக் காலத்தை மறுபடியும் காண்பரோ!
அணிசெய்த காலங்கள், அவனியின் பெரும்புகழாம்!
பிணியில்லாச் நெஞ்சத்தில் பிரியமாய் வாழ்ந்திருந்தோம்!

மறுபடியும் பெறுவதற்கு மனந்தான் ஏங்குமன்றோ?
அறமிதுவோ சிந்தையும்தான், பணிநிறைந்த பின்னும்;
திறம்கொண்ட காலங்கள் திரட்டிய இன்பங்கள்;
மறப்போமோ வாழ்நாளில் என்றோதான் இனி?

மனம்தாங்கும் அன்புதனை மறுபடியும் கோத்து,
இனம்புரியா இன்பத்தில், இயங்கும் மனத்தோடு,
மனம் பூக்கும் மகிழ்வுடனே மக்களுடன் நிறைந்து,
இனிவரும் காலத்திலும் வாழ்க **துரைபாண்டியரே!**

அன்புடன், **கு.ப. அசோகன்**, சுங்க இல்ல நினைவுகளோடு! **01-01-2021**